# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 ஐப்பசி மாதம் 08ம் திகதி முதல் 14ம் திகதி வரை

## *"அருள்மிகப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்"*

01. ஆரம்பப் பாடல் புபுது பாடல் இல 52 "பாவிகள் எமது……"

02. புகழ்ச்சிக்கான நோக்கு

- இறைவனைப் புகழ்ந்திட, அவருக்கு நன்றிப்பா இசைத்திட நாம் அறியோம். உண்மையாகவே நாம் அதற்கு தகுதியானவர்கள் இல்லை. இருப்பினும் தூயஆவியானவர் எமக்குள் இருந்தவாறு அதற்காக எம்மை உள்ளாக்குகிறார்.

**"தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில் எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியானவர் தாமே சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்."** (உரோமர் 8:26)

- பாலைவனத்தில் கிறிஸ்து ஆண்டவரின் உண்மை நிலையை அவருக்குத் தெளிவாக உறுதிப்படுத்தி கற்பித்த தூய ஆவியாரே எங்களுக்குள்ளும் வீற்றிருந்தவாறு எங்களை இறை புத்திரத்தன்மைக்கு உயர்த்தியவாறு அப்பா தந்தையோடு தொடர்புபடுத்துகிறார். பாடல்கள் மூலம் இறைவனைப் புகழ்ந்திட எம்மை அழைத்துச் செல்வது தூயஆவியாரே.
- நாம் செய்ய வேண்டியது யாதெனில் தூயஆவியானவருக்கு எமக்குள் செயலாற்றிட இடமளிப்பதேயாகும். ஆதலால் சுற்று சூழலுக்கு, இயற்கைக்கு, காற்றுக்கு ,அமைதிக்கு விழிப்புற்றவாறு தூயஆவியின் வல்லமையால் மயங்கி இறைவனைப் புகழ்வோம்.

  புபுது பாடல் இல 07 "தூய ஆவியே எம் மனதை……." பாடலைப் பாடியவாறு புகழ்ச்சியின் பாடலுக்கு உள்ளாவோம்.

03. வாராந்த நற்செய்தி

- உலகைப் படைத்தது இறைவனோடு தூயஆவியானவரும் இணைந்து செய்த செயலின் பிரதிபலனாகும். **"மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது."** (தொடக்க நூல் 1:2)
- தேவ தாய்க்கு மங்கள வார்த்தை கூறியது திடீரென்று அவசரமாக நடந்த நிகழ்வு அல்ல. அது இறைவன் முன் குறித்து வைத்திருந்த அவரது திருவிருப்பம் நிறைவேறியமையே. தேர்ந்தெடுத்தலும், செய்தியும் இறைவனிடமிருந்தே **"ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு எனும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா."** (புனித லூக்கா 1:26) தூதர் இறைவனின் முன்னிலையில் சேவை செய்யும் அவரது தூதராவார். **"நான் கபிரியேல், கடவுளின் திருமுன் நிற்பவன்"** (புனித லூக்கா 1:19)
- இறைவனின் விருப்பத்தை கலக்கமின்றி ஏற்றுக் கொள்ளாமை இறைவனின் வெறுப்புக்கு உள்ளாகுதலாகும். மோயீசன் பாலை நிலத்தில் மக்களுக்கு தண்ணீர் பெற்றுக் கொடுத்திட தனது கைத்தடியால் பாறையை ஒரு முறை அடிக்குமாறு கூறிய இறை கட்டளையை

சந்தேகப்பட்டு இரு முறை பாறைக்கு அடித்ததன் காரணமாக இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியின் தேசமாகியபாலும் தேனும் வழிந்தோடும் தேசத்தைக் காணும் பாக்கியத்தை இழக்க நேரிட்டது. கப்பிரியேல் வானதூதர் ஸ்நாபக அருளப்பரின் பிறப்பினை செக்கரியாவிற்கு அறிவிக்கையில் தனது மலட்டு மனைவியின் வயது முதிர்ந்த நிலையைக் குறித்து சந்தேகம் எழுந்ததன் காரணமாக அக்கணத்திலிருந்து ஸ்நாபக அருளப்பர் பிறக்கும் வரைக்கும் ஊமையான நிலைக்கு தள்ளப்பட்டார்.

- இயற்கையின் நியதிக்கு மாறாக ஆணையை அறியாமல் கன்னியொருவள் கருத்தருத்தலைக் குறித்த மாபெரும் விசுவாசத்தை பேறுபெற்ற தாயினுள் உருவாக்கியது தூயஆவியானவரே. வானதூதரின் குரல் தூயஆவியானவரின் குரலே, **‘‘ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை’’** (புனித லூக்கா 1:37) அந்த ஒலிக்கு ஆழமாக விழிப்புற்று, சமுதாய நிலைப்பாட்டின் முன்னிலையில் அதனை ஏற்றுக் கொண்டு பதிலளித்திட தேவதாயை வழிநடத்தியதும், அவ்வாறான ஆழத்திலும் ஆழமான வெறுமையை உருவாக்கியதும் தூயஆவியின் ஆற்றலாலேயே. **‘‘நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்.’’** (புனித லூக்கா 1:38)
- பேறுபெற்ற தாயாரினுள் ஆண்டவரின் மனுவுருவாகுதல் எனும் தூயஆவியின் செயல்பாடு வழியாக, உங்களுக்கு தூயஆவியானவர் வெளிப்படுத்தும் வெளிப்பாட்டினை குழுவில் கலந்துரையாடவும்.

04. வாரம் முழுவதும ‘‘கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை’’ என்பதனை இவ்வாரம் முழுவதும் அன்றாட நிகழ்வுகளில் உணர்ந்து செயல்படுங்கள். அதற்காக தூயஆவியானவருக்கு விழிப்புறுங்கள்.

- இறைவார்த்தையை ஏற்றுக்கொள்ளல் கீழ்படிதல் இலகுவான காரியமல்ல. உணர்ந்து அதனை ஏற்று செயல்படுத்தவும் அதற்கான வரம் வேண்டி செபியுங்கள்.

05. இறுதிப் புகழ்ச்சி புபுது பாடல் இல 137 ‘‘உமது வார்த்தையின் அடிமை.........’’